உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

தமிழாய்! தமிழனாய்!! தமிழ்மொழிக்காய்!!!

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 16.09.2026 • மலர் 04 • இதழ்: 259 • புதன் • Edition : Nagercoil • 16.09.2026 • Vol : 04 • Issue : 259 • Page : 4 • Rs. 5/-

பிரதமர் மோடியின் ராஜதந்திர அணுகுமுறைக்கு கிடைத்த பலன்கள்

உலகளாவிய போர்ப் பதற்றங்கள், வர்த்தகப் பூசல்கள் மற்றும் மேலை நாடுகளின் பொருளாதாரத் தடைகளுக்கு இடையே, டெல்லியில் 18வது பிரிக்ஸ் 2026 உச்சி மாநாடு நடந்து முடிந்துள்ளது.

இது வெறும் 'சர்வதேச உச்சி மாநாட்டின் நிறைவு' மட்டுமல்ல; மாறாக, 'விக்சித் பாரத்' எனும் வளர்ச்சியடைந்த இந்தியா நோக்கிய பயணத்தில் இந்தியாவின் உலகளாவிய ஆதிக்கத்தை பறைசாற்றும் நிகழ்வாகும்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை பிற நாடுகளின் நிபந்தனைகளுக்கு எப்போதுமே ஆட்படாது என்பதை தனது 'ராஜதந்திர தன்னாட்சி' கொள்கை மூலம் பிரதமர் மோடி உறுதி செய்துள்ளார். மேலும், உலகப் பொருளாதார மற்றும் பாதுகாப்பு முடிவுகளைத் தீர்மானிக்கும் மையப்புள்ளியாக இந்தியாவை அவர் உயர்த்தியுள்ளார்.

சமரசக் குரலாக மோடி: வல்லரசு நாடுகளும், ஆசிய ஐரோப்பிய நாடுகளும் பிளவுபட்டு நிற்கும் வேளையில், உலக அரசியல் முரண்பாடுகளைக் கடந்து அமைதியையும் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் முன்வைக்கும் சமரசக் குரலாகப் பிரதமர் மோடி உருவெடுத்துள்ளார்.

பாலஸ்தீனிய மக்களின் உரிமை, காசா போர் நிறுத்தம், மத்திய கிழக்கு ஆசியப் போர், உக்ரைன் ரஷ்ய போர், போன்ற சிக்கல்களுக்குத் தீர்வு காணக் குரல் கொடுத்து, 'சர்வதேச மதிப்புமிக்க தலைவராக' உயர்ந்துள்ளார்.

ராஜதந்திரத்தின் அடையாளம்: அமெரிக்க ஆதிக்கத்துக்கு எதிராகவும், டாலருக்கு மாற்றாகவும் 'பிரிக்ஸ் கரன்சி' குறித்து பேசப்பட்டாலும், மேற்கத்திய நாடுகளின் பகையைத் தவிர்க்க நேரடியாக புதிய கரன்சி எதையும் கொண்டுவர வில்லை. அதேநேரம், பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தில் அந்தந்த நாடுகளின் சொந்த கரன்சிகளையே பரிமாறிக்கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம் டாலரைச் சார்ந்திருக்கும் நிலை வெற்றிகரமாகக் குறைத்து மோடி தனது ராஜதந்திரத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

ஐ.நா, ஐ.நா பாதுகாப்பு கவுன்சில், ஐஎம்எஃப், உலக வங்கி ஆகியவற்றில் ஆசிய, ஆப்பிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் பங்கேற்பை அதிகரிக்க மோடி குரல் கொடுத்தார். வளரும் நாடுகளை வெறும் முடிவுகளை ஏற்கும் பார்வையாளர்களாக இல்லாமல், 'உலக விதிகளைச் செதுக்கும் சக்தி'களாக உயர்த்தியதில் அவரது பங்களிப்பு இணையற்றது.

100% ஏற்கப்பட்ட டெல்லி பிரகடனம்: 140 க்கும் மேற்பட்ட சர்வதேச விவகாரங்களை உள்ளடக்கிய 'புதுடெல்லி பிரகடனம் 2026', எவ்வித எதிர்ப்புமின்றி 100 சதவீதம் ஒருமனதாக ஏற்றுக்கொள்



ளப்பட்டது.

சவுதி அரேபியா, ஈரான், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு இடையே மோதல்கள் நிலவும் சூழலில், அந்நாடுகள் தங்களின் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒரே தளத்துக்கு வந்தது மோடியின் ராஜதந்திரத்துக்கு கிடைத்த வெற்றி. இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஏற்க வைப்பதற்காக, ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணி வரை பிரதமர் மோடி தலைமையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

பாகிஸ்தானுக்கு 'செக்': எல்லை தாண்டிய பயங்கரவாதம், தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் தருவது மற்றும் நிதியுதவி அளிப்பது ஆகியவற்றுக்கு எதிராக மறைமுகமாகப் பாகிஸ்தானுக்கு 'செக்' வைக்கும் விதமாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பயங்கரவாதம் எந்த வடிவில் வந்தாலும் எதிர்ப்போம் என்ற ஒரே குடையின்கீழ் பிரிக்ஸ் நாடுகளைக் கொண்டுவந்து இந்தியாவின் கரத்தைப் பிரதமர் மோடி வலுப்படுத்தியுள்ளார்.

ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளின் உரிமை: சர்வதேச பண நிதியம் மற்றும் உலக வங்கியில் வளர்ந்து வரும் நாடுகளுக்கான பங்களிப்பு, வாக்களிக்கும் அதிகாரம் ஆகியவை அதிகரிக்கப்பட வேண்டும் என்று மோடி முழங்கினார்.

தென்னாப்பிரிக்கா, எகிப்து, புருண்டி, நைஜீரிய நாட்டுத் தலைவர்களுடன் தனித்தனியே நடத்தி முடித்த சந்திப்புகள் மூலம் ஆப்பிரிக்கக் கண்டத்தில் இந்தியாவின் முதலீட்டு வாய்ப்புகள் விரிவடைந்துள்ளன.

கோல்ட்மேன் சாக்ஸ் அமைப்பின் முன்னாள் நிபுணர் ஜிம்'ஓ'நீல் கூறுகையில், "பிரதமர் மோடி, பிரிக்ஸ் மற்றும் மேற்கத்திய நாடுகள் இரண்டிலுமே விரும்பத்தக்க தலைவராக உருவெடுத்துள்ளார்" எனப் பாராட்டியுள்ளார்.

சந்தேகங்களைத் தகர்த்த தலைமை: 2024ஆம் ஆண்டில் பிரிக்ஸ் அமைப்பில் 6 நாடுகள் இருந்த நிலையில், அதன்பின் மேலும் 5 நாடுகள் இணைந்து அமைப்பு விரிவடைந்தது. அதிகமான உறுப்பினர்கள் இணைவதால் பிரிக்ஸ் பிளவுபடலாம் என்று சர்வதேச அரசியல் வல்லுநர்கள் எச்சரித்தனர்.

மாறுபட்ட அரசியல் அமைப்புகளையும் பிராந்தியப் போட்டிகளையும் கொண்ட நாடுகளை ஒரே அமைப்பில் வைக்க முடியுமா என்று பலர் கேள்வி எழுப்பினர். மேலும், இது மேற்கத்திய எதிர்ப்பு மோதல் களமாக மாறுமா அல்லது பயனற்ற பேச்சு மன்றமாக உருமாறிவிடுமா என்ற வெளிப்படை அழுத்தமும் அதிகரித்தது.

ஆனால், 2026இல் இந்தியாவின் தலைமைத்துவமானது அந்த அமைப்பின் அடையாளத்தை நிலைப்படுத்தியது. பிரிக்ஸ் அமைப்பை மேற்கத்திய எதிர்ப்பு மன்றமாக மாற்றாமல், 'குளோபல் சவுத்' (Global South) எனப்படும் தெற்குலகத்துக்கான அர்ப்பணிக்கப்பட்ட ஒரு 'மேற்கத்திய சார்பற்ற,

தீர்வு நோக்குடைய' தளமாக வெளிப்படுத்தியது பிரதமர் மோடியின் தலைமைப் பண்புக்கு கிடைத்த வெற்றியாகும். இந்தியா சீனா மற்றும் மேற்காசிய நாடுகளின் இணைப்பு: 7 ஆண்டுகளுக்குப் பிறகு சீன அதிபர் ஷிஜின்பிங் டெல்லி வந்திருந்தார். எல்லையில் நிலவிய பதற்றத்தை மறந்து, இருதரப்பு உறவுகளை நீண்டகாலக் கண்ணோட்டத்தில் அணுகும் வகையில் பிரதமர் மோடி, ஜிஜின்பிங் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

கருத்து வேறுபாடுகள் மோதல்களாக மாறக்கூடாது என்றும், இருதரப்பு உறவுகளை நீண்டகாலக் கண்ணோட்டத்தில் அணுக வேண்டும் என்றும் இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டது.

வர்த்தக ரீதியாக அமெரிக்காவை மட்டுமே அதிகம் சார்ந்திருப்பதற்கு பதிலாக, ஆசியாவின் பெரிய சந்தையைக் கொண்டுள்ள சீனாவை ஏற்றுமதிக்கு பயன்படுத்திக்கொள்ளும் பிரதமர் மோடியின் உத்திக்கு வெற்றி கிடைத்துள்ளது.

தக்கலை அருகே பைக் மீது கார் மோதி விபத்து; மூதாட்டி உயிரிழப்பு

தக்கலை, செப். 16

நாகர்கோவில் அடுத்த தெங்கம்புதூர் பால்குளம் பகுதியை சேர்ந்தவர் முத்துக்குமார் (53). இவர் நேற்று முன்தினம் நாகர்கோவில் இருந்து மார்த்தாண்டம் நோக்கி தனது பைக்கில் சென்று கொண்டிருந்தார். அப்போது வில்லுக்குறி பகுதியில் சென்றபோது எதிரே வந்த கார் ஒன்று அவர் மீது மோதி விட்டு அருகில் இருந்த மரத்தில் மோதி நின்றது.

இந்த விபத்தில் முத்துக்குமார் மற்றும் காரில் இருந்த 6 பேரான ஹெலன் மேரி (70) காரை ஓட்டி வந்த சகாய ஆனந்த் (36), சகாய பிரிட்டோ (16), ஆரோக்கிய ஜோசுவா (16), நயாமரி ஜோஸ்வா (13) ஜோயல் (12) ஆகிய 6 பேர் படுகாயம் அடைந்தனர். உடனே அனைவரையும் அக்கம் பக்கத்தினர் மீட்டு அவர்களை தக்கலையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் ஹெலன் மேரியின் உடல் நிலை மிகவும் மோசமாக இருந்தது.

இதனால் மேல் சிகிச்சைக்காக அவரை நாகர்கோவில் உள்ள ஒரு தனி ஒரு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு அவர் உயிரிழந்தார். இதை அடுத்து தக்கலை போலீசார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் விபத்து ஏற்படுத்திய சகாய ஆனந்த் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்தநாள் விழா: தே.மதியழகன் தலைமையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை



கிருஷ்ணகிரி::செப்:16, பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்தநாளையொட்டி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு, கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தே.மதியழகன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு தே.மதியழகன் தலைமையில், கிருஷ்ணகிரி மேற்கு நகரக் கழகச் செயலாளர் அஸ்லாம் ரகுமான் அவர்கள் மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு நகரக் கழகச் செயலாளர் வேலுமணி ஆகியோரின் ஏற்பாட்டில், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டு, அண்ணாவின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இதில் முன்னாள் மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான செங்குட்டுவன். திமுக பேரவை தலைவர் தட்றஹள்ளி நாகராஜ், கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர் சாவித்திரிகடலரசு மூர்த்தி, முன்னாள் நகர்மன்ற தலைவரும் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளருமான பரிதா நவாப், முன்னாள் நகர செயலாளர் எஸ். கே.நவாப், காவேரிப் பட்டினம் பொறுப்பாளர்கள் செந்தில்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டிசிஆர் தினேஷ் மத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் வசந்தராசு மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம் வெங்கடேசன், பர்கூர் ஒன்றிய செயலாளர் அறிஞர், மாநில செயற்குழு உறுப்பினர் ஜே. கே. கிருபாகரன், மாநில பொதுக்குழு ஏ.சி.நாகராஜ், கிருஷ்ணகிரி ஒன்றிய செயலாளர் மகேந்திரன், காவேரிப் பட்டினம் ஒன்றிய செயலாளர் சரவணன், நகர் மன்ற உறுப்பினர்கள் மீன் ஜெயக்குமார், செந்தில்குமார், பெரோஸ் கான், ஆர்.கே.பழனி, எம்.ஆர்.எப்.பாலாஜி, மதன், பரந்தாமன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

காசிமேடு, எண்ணூர் கடலில் விநாயகர் சிலைகளை கரைக்க அனுமதிக்கக் கூடாது: சிஐடியூ மீன்பிடி தொழிற்சங்க கூட்டமைப்பு



சென்னை: காசிமேடு, எண்ணூர் கடலில் விநாயகர்சிலைகளைகரைக்க அனுமதிக்க கூடாது என்று சென்னை மாவட்ட ஆட்சியரிடம் தமிழ்நாடு மீன்பிடி தொழிற்சங்க கூட்டமைப்பு (சிஐடியு) வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு மீன்பிடி தொழிற்சங்க கூட்டமைப்பு (சிஐடியு) தலைவர் ஆர்.லோகநாதன், சென்னை மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனுவில், "தேசிய பசுமைத் தீர்ப்பாயம் கடந்த வாரம் பட்டினப்பாக்கம் மற்றும் நீலாங்கரை கடற்பகுதிகளில் விநாயகர் சிலைகளைக் கரைக்கத் தடை விதித்துள்ளது. ஆமைகள் இனப்பெருக்கம் உள்ளிட்ட சுற்றுச்சூழல் காரணங்களுக்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

எனினும், இந்தத் தடையின் காரணமாக சென்னை மாநகரின் பெரும்பாலான சிலைகள் வடசென்னையில் உள்ள காசிமேடு பகுதிக்குத் திருப்பிவிடப்படும் சூழல் உருவாகியுள்ளது. காசிமேடு மற்றும் எண்ணூர் பகுதியில் அதிகப்படியான L சிலைகளைக் கரைப்பது கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தும். கடல் நீர் மாசு உள்ளிட்ட சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்படும். காசிமேடு மற்றும் எண்ணூர் என்பது ஒரு சாதாரண கடற்கரை அல்ல, அது லட்சக்கணக்கான மீனவர் குடும்பங்களின் வாழ்வாதார மையம்.

கடலில் கரைக்கப்படும் சிலைகளின் எஞ்சிய பாகங்களான மரச்சட்டங்கள், மூங்கில் மற்றும் இரும்புக் கம்பிகள் கரையோரம் மற்றும் நடுக்கடலில் தேங்குகின்றன. கடலுக்குச் செல்லும் மீனவர்களின் படகுகளில் இவை மோதி சேதத்தை ஏற்படுத்துவதோடு, பல ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள மீன்பிடி வலைகளைக் கிழித்து விடுகின்றன. ரசாயனக் கழிவுகளால் மீன் வளமும் பெருமளவு குறைந்து, மீனவர்களின் அன்றாட வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிறது.

எனவே காசிமேடு, எண்ணூர் கடலில் சிலைகளை கரைக்க அனுமதிக்க கூடாது. செயற்கை குளங்களை அமைத்து, சிலைகளை அங்கு மட்டுமே கரைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

வேறு வழியின்றி கடலில் சிலைகளை கரைத்தால், கழிவுகளை 24 மணி நேரத்துக்குள் அகற்றும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்" என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கலெக்டர் நேரில் ஆய்வு



நாகர்கோவில், செப்.16

கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆசாரிபள்ளம் பகுதியில் செயல்படுகிறது. இங்கு நேற்று மாவட்ட ஆட்சி தலைவர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் தங்கள் வருகை பதிவினை வரவேற்பறையில் பதிவு செய்து பெறப்படும் பதிவு அட்டைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, செயல்முறை விளக்கங்கள் கேட்டறிந்தார். தொடர்ந்து மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் தாங்கள் சிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டிய பிரிவு, மருத்துவர், அங்கு செல்வதற்கான வழி உள்ளிட்டவைகளை கேட்டறியும் உதவி மையத்தினை பார்வையிட்டு, நோயாளிகள் காத்திருப்போர் அறை உள்ளிட்ட பிரிவுகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மருத்துவமனையில் வழங்கப்படும் சிகிச்சை முறைகள் மற்றும் சிகிச்சை முறைகள் குறித்து நோயாளிகளிடம் கேட்டறியப்பட்டது.

இம்மருத்துவமனைக்கு வரும் முதியோர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமெனவும், நோயாளிகளுக்கு தரமான சிகிச்சைகள் அளிக்கவும், நோயாளிகளின் தேவைகளை கருத்துடன் கேட்டறிந்து உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென துறை சார்ந்த அலுவலர்களை அறிவுறுத்தினார்.

முன்னதாக தொல்ல விளை அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகள்குறித்தும், மருந்துகளின் தரம் குறித்தும், கர்ப்பிணி பெண்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வழங்கப்படும் இலவச சத்தான உணவுகள் குறித்து கேட்டறிந்ததோடு, தரமான உணவுகளை வழங்க அறிவுறுத்தினார். மேலும் மருந்துகளின் இருப்பு குறித்தும் கேட்டறியப்பட்டது.

தொடர்ந்து கோணம் தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர் சமூக நீதி விடுதி பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போது, ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைமுதல்வர்மரு.லியோ டேவிட், கண்காணிப்பாளர் மரு.கிங்சிலி, உறைவிட மருத்துவர் மரு.விஜய லெட்சுமி, உதவி உறைவிட மருத்துவர் மரு.ரெனி மோல், மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

மார்த்தாண்டத்தில் துணிகள் வாங்குவது போல் நடித்து பெண்ணின் தாலி செயின் பறிப்பு

மார்த்தாண்டம், செப்.16

மார்த்தாண்டம் அருகே கோட்டகம் காஞ்சிர கோடு பகுதியை சேர்ந்தவர் சந்தோஷ் குமார் மனைவி சொர்ணலட்சுமி. அந்த பகுதியில் உள்ள பெண்களுக்கான துணிக்கடையில் ஊழியராக வேலை செய்து வருகிறார். நேற்று முன்தினம் மாலை 5:30 மணி அளவில் ஹெல்மெட் அணிந்த இரண்டு பேர் இருசக்கர வாகனத்தில் துணிக்கடையின் முன்பு வந்து நின்று உள்ளனர். பின்னர் அவர்களில் ஒருவர் மட்டும் கடைக்குள் சென்று துணி வாங்குவது போல் நடித்து அங்கு பணியில் இருந்த சொர்ணலட்சுமி இடம் பேச்சு கொடுத்துள்ளார்.

அப்போது திடீரென சொர்ணலட்சுமியின் கழுத்தில் கடந்த நான்கு பவுன் எடையுள்ள தாலிச் செயினை அந்த நபர் பறித்துள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த சொர்ணலட்சுமி யில் இருந்து சொர்ணலட்சுமி செயினை விடாமல் திருடனிடம் போராடி உள்ளார். அந்த நபர் அவரை கீழே தள்ளிவிட்டு சென்னை பறித்துள்ளார். இந்த போராட்டத்தில் தாலி செயின் இரண்டு துண்டாக அறுந்து விழுந்து உள்ளது. அதில் ஒரு பகுதி திருடனிடமும் மற்றொரு பகுதி சொர்ணலட்சுமியிடமும் மாட்டியுள்ளது.

பின்னர் கடைக்கு வெளியே பைக்கில் தயாராக நின்ற தனது கூட்டாளியுடன் சேர்ந்து அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர். திருடன் கீழேதள்ளியதில் சொர்ணலட்சுமிக்கு உடலில் காயம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இது குறித்து மார்த்தாண்டம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் அந்தப் பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்து விசாரித்து வருகின்றனர். பகல் நேரத்தில் துணி வாங்குவது போல் நடித்து பெண் ஊழியரிடம் நகை பறிப்பில் ஈடுபட்ட சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

தருமபுரி மாவட்ட அதிமுக சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா



தருமபுரி செப்டம்பர் 16

தருமபுரி மாவட்ட அதிமுக சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 118 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாவட்டச் செயலாளர்கள் ஆர். அசோகன், டி.ஆர். அன்பழகன் ஆகியோர் தலைமையில் பெரியார் சிலை அருகில் இருந்து அதிமுகவினர் ஊர்வலமாக வந்து நான்கு ரோட்டில் உள்ள அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செய்தனர். இந்த நிகழ்வில் தலைமை கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் டி. கே. ராஜேந்திரன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ் .ஆர். வெற்றிவேல், நகர செயலாளர் பூக்கடை ரவி, நல்லம்பள்ளி ஒன்றிய செயலாளர்கள் சிவப்பிரகாசம், பழனி மற்றும் மாநில, மாவட்ட ,நகர, ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

குடிமக்கள் நுகர்வோர் மன்ற விழிப்புணர்வு கூட்டம் கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது



கிருஷ்ணகிரி செப். 16: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் உத்தரவின்படி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மதன்குமார் வழிகாட்டுதலின்படி, குடிமக்கள் நுகர்வோர் மன்ற விழிப்புணர்வு கூட்டம் கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் நளினி தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பறக்கும் படை வட்டாட்சியர் பூவி தன் முன்னிலை வகித்தார். கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி கூட்ட அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்க மாநில பொருச்செயலாளரும், குடிமக்கள் நுகர்வோர் மன்ற ஒருங்கிணைப்பாளரு மான டாக்டர் கே.எம்.சந்திர மோகன் கலந்துகொண்டு மாணவிகளிடையே கருத்துரை வழங்கினார். அப்போது அவர் பேசும் பொழுது மாணவிகள் ரேஷன்கடைகளில் எடை அளவு சரியாக உள்ளதா என சரி பார்க்க வேண்டும் எனவும், கடைகளில் எந்த பொருள் வாங்கினாலும் அதற்கு பற்று சீட்டு அவசியம் கேட்டு பெற வேண்டும் என ஆலோசனை வழங்கினார். மேலும் தமிழகத்தில் லஞ்சத்தை படிப்படியாக குறைத்து வரும் தமிழக முதல்வரை வெகுவாக பாராட்டி பேசினார். சமுதாயத்தில் நுகர்வோர் விழிப்புணர்வுடன் எவ்வாறெல்லாம் செயல்பட வேண்டுமென தக்க ஆலோசனைகளை மாணவிகளுக்கு வழங்கினார். பொது மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை சரி செய்ய நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் மாணவிகள் முறையிட்டு அதை சரி செய்ய வேண்டும் என தெளிவாக எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாநில இணைச்செயலாளர் நல்லசாமி, மாநில மகளிர் அணி செயலாளர் பத்மா, மாவட்ட தலைவர் சிவசக்திவேல், மாவட்ட செயலாளர் மாதேஷ், மாவட்ட இணை செயலாளர் தில்லைராஜா, மாவட்ட மகளிர் அணி தலைவி ராதா, மாவட்ட மகளிர் அணி துணை தலைவி சரண்யா, அஞ்செட்டி ஒன்றிய இளைஞரணி தலைவர் குரு கிரண் உள்ளிட்டவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவிகள் அனைவருக்கும் நுகர்வோர் விழிப்புணர்வு சான்றிதழை பறக்கும் படை வட்டாட்சியர் பூவி தன் மற்றும் குடிமக்கள் நுகர்வோர் மன்ற ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சந்திரமோகன் ஆகியோர் வழங்கினார்கள். நிகழ்ச்சியின் இறுதியாக அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி முதுகலை ஆசிரியை சுலக்சனா நன்றி உரையாற்றினார்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் பச்சாம்பாளையத்தில் விளைநிலத்தில் தேசிய எண்ணெய்வித்து அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.இதை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அரசு போக்குவரத்துகழக நாகர்கோவில் சுற்றுலா பயணியர் தங்கும் விடுதியில் குறைந்த கட்டணத்தில் தங்குவதற்கான வசதி

நாகர்கோவில், செப்.16 சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரிக்கு உலகம் முழுவதிலிருந்தும் ஆண்டு தோறும் ஏறத்தாழ 20இலட்சத்திற்கும் மேலான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். தமிழ்நாடு அரசின்சார்பில் கன்னியாகுமரிக்கு வருகை தருகின்ற அனைத்து வகையான சுற்றுலாப்பயணிகளும் சுற்றுலாத்தலங்களை கண்டு களிக்கும் வகையில் நகரை அழகுபடுத்தும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் போக்குவரத்து மற்றும் சுற்றுலாப்பயணிகள் தங்குவதற்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. கடலின் நடுவே பாறையில் அமைந்துள்ள 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலை விவேகானந்தர் மண்டபம் அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் மண்டபம் கண்ணாடி இணைப்பு பாலம் பகவதியம்மன் கோவில் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடலின் அழகை கண்டு ரசிக்க காட்சிக்கோபுரம் சூரிய உதயம், அஸ்தமனம், வட்டக்கோட்டை, மாத்தூர் தொட்டிப் பாலம், திற்பரப்பு அருவி, பத்மநாபபுரம் அரண்மனை இத்தகைய சிறப்பம்சங்கள் கொண்ட சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரிக்கு ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் முதல் ஜனவரி மாதம் வரையிலும், கோடை காலமான ஏப்ரல், மே மாதங்களிலும் வருகை தருகின்ற சுற்றுலாப் பணிகளின் எண்ணிக்கை அதிக அளவில் இருக்கும்.

கன்னியாகுமரிக்கு வருகை தருகின்றசுற்றுலாப்பயணிகள் எவ்வித சிரமமுமின்றி குறைந்த வாடகை கட்டணத்தில் தங்குவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், நாகர்கோவில் மண்டலம் சார்பில் கன்னியாகுமரி கோவளம் கடற்கரை சாலையிலுள்ள பேருந்து நிலைய வளாகத்தில்தங்கும் விடுதி செயல்பட்டு வருகிறது. சுத்தமான குடிநீர், நவீன கழிப்பிட வசதி வாகன நிறுத்துமிடம் மற்றும் 24 மணிநேர பாதுகாப்பு வசதி என அனைத்து வசதிகளுடன் கூடிய இந்த விடுதியிலிருந்து கடற்கரை அழகு, சூரிய உதயம் மற்றும் அஸ்தமனம் ஆகியவற்றை மிக அருகிலிருந்து கண்டு ரசிக்கலாம்.

இந்த தங்கும் விடுதியில் இரு படுக்கைகளுடன் கூடிய குளிர்பதன அறைகள் , இரு படுக்கைகளுடன் கூடிய சாதாரண அறைகள், ஒரு படுக்கையுடன் கூடிய அறை, மற்றும் இரு படுக்கையுடன் கூடிய சாதாரண அறைகள் உள்ளன. விடுதிக்கட்டண விபரம்:(வரிகள் உட்பட) இரு படுக்கை குளிர்பதன அறை ஒன்றுக்கு ரூ. 1406/ இரு படுக்கை சாதாரண அறை ஒன்றுக்கு ரூ. 945/ 1ஒரு படுக்கைகள் அறை ரூ.263/ இரு படுக்கை சாதாரண அறை1 , ரூ 526/ ஆகும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் ,நாகர்கோவில் மண்டலத்தின் இந்த தங்கும் விடுதியில் தங்கிட நேரடியாகவோ அல்லது 9487599083, 9487599373, மற்றும் 9487599087 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யலாம். சுற்றுலா ப்பயணிகள் இந்த தங்கும் விடுதியில் பாதுகாப்பாக தங்கி கன்னியாகுமரி உள்ள சுற்றுலா த்தளங்களை இனிதே கண்டு களிக்குமாறு போக்குவரத்துக்கழகம், நாகர்கோவில் மண்டல போக்குவரத்து கழக பொது மேலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.



ஈரோட்டில் திமுக சார்பில் அண்ணா சிலைக்கு மாலை

ஈரோட்டில் மறைந்த முதலமைச்சர் அண்ணாவின் பிறந்த நாளை யொட்டி ஈரோடு பன்னீர் செல்வம் பூங்காவில் உள்ள அவரது சிலைக்கு திமுக வினர் முன்னாள் அமைச்சர் ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் முத்து சாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் முன்னாள் எம் பி அந்தியூர் செல்வராஜ் மாவட்ட துணை செயலாளர் செந்தில் குமார் முன்னாள் எம்எல்ஏ விசிசந்திரகுமார் மாநகர செயலாளர் சுப்பிரமணியம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விளாத்திகுளம் பேரூராட்சி பொதுமக்களுக்கு செயல் அலுவலர் முக்கிய அறிவிப்பு

விளாத்திகுளம் செப். 16

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேரூராட்சி பொதுமக்கள் தங்கள் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள்ஆகியவற்றை தனித்தனியாக பிரித்து தூய்மை பணியாளர்களிடம் வழங்க வேண்டும் என்று செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இது குறித்து விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் சுப்பிரமணியன் கூறியிருப்பதாவது, தமிழ் நாடு பேரூராட்சிகளின் இயக்குனர் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின்இணை இயக்குனர் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி விளாத்திகுளம் பேரூராட்சி பொது மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால், விளாத்திகுளம் பகுதியில் தூய்மை பணியை மேம்படுத்தும் நோக்கில் விளாத்திகுளம் பேரூராசி நிர்வாகம் புதிய மற்றும் கடுமையான வழிகாட்டு தல்களை வெளியிட்டுள்ளது. அதன்படி பொதுமக்கள் தங்கள் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில்உள்ளகுப்பைகளை நாள்தோறும் மக்கும் குப்பைகள் மக்காத குப்பைகள் என இரண்டு பிரிவுகளாகதரம் பிரித்துதூய்மை பணியாளர்களிடம் வழங்க வேண்டும். மேலும் ஆபத்தான மருத்துவ கழிவுகள், பயன்படுத்தப்பட்ட பேட்டரிகள் ,டியூப் லைட்டுகள், மின்னணு கழிவுகள், நாப்கின்கள் மற்றும் முக கவசங்கள் போன்றவற்றை சாதாரணகுப்பைகளுடன் கலக்காமல் தனியாக சேகரித்து வழங்க வேண்டும். வருகிற அக்டோபர் 1 ஆம் தேதி முதல் குப்பைகளை தரம் பிரித்து வழங்கத் தவறும் பட்சத்தில் உங்கள் வீடுகளில் திடக்கழிவுகள் பெறப்பட மாட்டாது, விளாத்திகுளம் பேரூராட்சி பொதுமக்கள் அனைவரும் பேரூராட்சி நிர்வாகத்தின் இந்த தூய்மை பணிக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். விதிகளை மீறி ஒரு மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் விளாத்திகுளம் பேரூராட்சி செயல் அலுவலர் சுப்பிரமணியன் இந்த செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.



சென்னை, கே.கே. நகர், மீனாட்சி பொறியியல் கல்லூரியின் 20 மற்றும் 21வது பட்டமளிப்பு விழா



சென்னை செப் 15

சென்னை, கே.கே. நகர், மீனாட்சி பொறியியல் கல்லூரியின் 20 மற்றும் 21வது பட்டமளிப்பு விழா திறந்தவெளி அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் தலைமை ஆலோசகரும், முன்னாள் சிறந்த விஞ்ஞானியும் இயக்குநருமான டாக்டர் ஜி. மதுசூதன் ரெட்டி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு L l!ஊக்கமளிக்கும் உரையாற்றினார்.அவர் 863 பட்டதாரி மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கி, சிறப்பு, புதுமை, நேர்மை மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்படுமாறு அறிவுறுத்தினார். இவ்விழாவிற்கு கல்லூரித் தலைவர் டாக்டர் ஜி. ஆர். கோகுல் தலைமை தாங்கினார்;

செயல் இயக்குநர் டாக்டர் என். ரெங்கராஜன், முதல்வர் டாக்டர் ஐ. மஞ்சு, பேராசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.

கோவை ஆர் எஸ் புரம் அருள்மிகு ஸ்ரீ வித்தக விநாயகர் திருக்கோவில் நடைபெற்ற 37 வது ஆண்டு விநாயகர் சதுர்த்தி திருவிழா



கோவை செப்:16

கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் உள்ள இக்கோவிலில் விநாயகர் சதுர்த்தி அன்று ஆதரவற்ற குழந்தைகள், மனநலம் குன்றிய குழந்தைகளையும், உடல் ஊனமுற்றவர்கள் குழந்தைகளையும், மற்றும் மாணவ, மாணவிகளையும் அழைத்து வந்து சிறப்பு பூஜை செய்து அவர்களுக்கு அன்னதானம் வழங்கியும் அனைத்து மாணவ மாணவி குழந்தைகள் நலமாக வாழ சிறப்பு அலங்காரத்தில் சிறப்பான பூஜை நடைபெற்றது. 37 ஆண்டுகளாக தமிழ் நாட்டிலேயே தினமும் 108 மூலிகைகளால் யாகம் செய்து காலை நேரத்தில் அபிஷேகம் செய்து சிறப்புடன் அனுதினமும் செய்து வருகின்ற கோயில் இந்த திருக்கோயில் ஒன்றுதான் அனுதினமும் காலையில் கூழ், பாயாசம், மாலையில் பலகாரங்களும் வழங்கி ஆன்மீக பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை அள்ளித் தருகின்ற அருள்மிகு ஸ்ரீ வித்தக விநாயகர் கோவிலில் சிறப்பு தனி சிறப்பானது. ஒரு முறை தாங்கள் வந்து தங்களுக்கு என்ன பிரார்த்தனை செய்கின்றார்களோ கண்டிப்பாக உடனே அருள்மிகு ஸ்ரீவித்தக விநாயகர் முடித்துக் கொடுப்பார். என்பது இந்த கோவிலின் சிறப்பானதாகும்.

விளாத்திகுளத்தில் பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்த நாள் விழா

விளாத்திகுளம் செப். 16.

தமிழக முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் தமிழகம் முழுவதும் பல்வேறு அரசியல் கட்சியினரால் கொண்டாடப்பட்டு வருகிறது பல்வேறு அரசியல் தலைவர்கள் அறிஞர் அண்ணாவிற்கு புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு விளாத்திகுளம் பகுதி அதிமுக சார்பில் மார்பளவு உள்ள எம்ஜிஆரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து அதன்பின் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அறிஞர் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.

நடைபெற்ற இந்தநிகழ்வில் விளாத்திகுளம் அதிமுக ஒன்றிய செயலாளர்கள் ராமச்சந்திரன், மகேஷ்,பால்ராஜ், தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆனந்த், மருதுபாண்டி அதிமுக நிர்வாகிகள் வேல்முருகன், சண்முக சாமி, ஆசைத்தம்பி, மகளிர் அணி சாந்தி, ஆறுமுகத்தாய், குமாரத்தாய் உட்பட அதிமுக தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

தென்காசியில் ஈதல் இதயம் அறக்கட்டளை தொடக்கம்



தென்காசி, செப்.16

தென்காசியில் TAF IAS Academy நிறுவனம் சார்பில் ஈதல் இதயம் அறக்கட்டளை தொடக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்விற்கு நிறுவனத் தலைவர் ஆகாசமூர்த்தி தலைமை தாங்கினார். நிர்வாக இயக்குநர் மாரியப்பன் முன்னிலையில், முன்னாள் காவல்துறை தலைவர் முனைவர் சைலேந்திர பாபு IPS அறக்கட்டளையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் சத்துணவு ஊழியர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளை வென்றெடுக்க பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடத்திய தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாவட்டச் செயலாளரும், தமிழ்நாடு சமூக நலத்துறை பணியாளர் சங்கத்தின் முன்னாள் மாநிலப் பொதுச் செயலாளரும், ஜாக்டோஜியோ அமைப்பின் முன்னாள் மாநில உயர்மட்டக் குழு உறுப்பினருமான பணி ஓய்வு பெற்ற தொழிற் கூட்டுறவு அலுவலர் தோழர் துரைசிங்குக்கு முன்னாள் காவல்துறை தலைவர் முனைவர் சைலேந்திரபாபு IPS “சிறந்த சமூக சேவகர்” விருது வழங்கி கௌரவித்தார் மேலும் தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் தங்கராஜ், கல்லூரி பேராசிரியர் டாக்டர் பால் மகேஷ் மற்றும் ஆடிட்டர் சரவணன் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் TAF IAS Academy மூலம் பயிற்சி பெற்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய பல்வேறு போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று பல்வேறு அரசுத் துறைகளில் பணிபுரியும் 200க்கும் மேற்பட்ட சாதனையாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வை வேல் கனி தொகுத்து வழங்கினார். நிறைவாக அப்துல்லா நன்றியுரை யாற்றினார். இலஞ்சி பள்ளி அறிவியல் ஆசிரியர் சுரேஷ்குமார் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.

புலிக்கு பயந்து வீட்டுக்குள் இருக்கும் மலைவாசி மக்களுக்கு அரிசி மற்றும் உணவுப்பொருட்கள் வழங்கிய பன்னாட்டு லயன்ஸ் இயக்கம்



நீலகிரி செப்:16

நீலகிரி மாவட்டம் கூடலூர் ஓவேலி பகுதியில் உள்ள மலைவாழ் மக்களின் இரண்டு சாமானிய மக்களை கடந்த சில தினங்களுக்கு முன்பு வனவிலங்கு புலி கொடூரமாக வேட்டையாடியது. அந்த மலை கிராமங்களில் தனித்தனியாக 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

தற்போது அவர்கள் வன விலங்கு புலிக்கு பயந்து வீட்டிலேயே இருந்து வருகிறார்கள்.அவர்கள் உணவின்றி தவித்து வருகிறார்கள்.அந்தப் பகுதியில் உள்ள சமூக ஆர்வலர்கள் மூலம் நமது லயன்ஸ் இயக்கத்திற்கு தெரிய வந்தது.

பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் மாவட்டம் 3242 சி ஆளுநர் செல்வராஜ் ஆலோசனையின் பேரில்,பன்னாட்டு லயன்ஸ் இயக்கத்தில் பேரிடர் மாவட்ட தலைவர் கதிரவன், ஜி எம் டி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார்நேருநகர்லயன்ஸ் சங்கம் தலைமையில் பன்னாட்டு லயன்ஸ் சங்கங்கள்தொடர்ந்து அவர்களுக்கு தேவையான அரிசி பருப்பு எண்ணெய் மசாலா பொடிகள் பெட்ஷீட் பிஸ்கட் போன்றவை வழங்கி வருகிறார்கள்.

அந்த வகையில் கே ஆர் புரம், நேரு நகர், கூடலூர், கூடலூர் வெஸ்டன் காட்ஸ், உதகமண்டல், மகிழ்ச்சி லயன்ஸ் சங்கம் மற்றும் பல்வேறு லயன்ஸ் சங்கங்கள் இணைந்து இந்த சேவையை செய்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் எம் திராவிட மணி, கூடலூர் ஆர் டி ஒகுணசேகரன், கூடலூர் காவல்துறை துணை கண்காணிப்பாளர் கோபால கிருஷ்ணன், ஓ வேலி டவுன் பஞ்சாயத்து தலைவர் சித்ரா தேவி, துணைத் தலைவர் கே சகாதேவன், வழக்கறிஞர் பரசுராமன், கூடலூர் லயன்ஸ் சங்கத்தின் தலைவர் தாமஸ் மற்றும் கவுன்சிலர் வர்கீஸ், கூடலூர் வெஸ்டன் காட்ஸ் லயன்ஸ் சங்கத்தின் தலைவர் ரவிக்குமார், கே ஆர் புரம் லைன்ஸ் சங்கத்தின் தலைவர் செல்வ விநாயகம், உதக மண்டல் லைன்ஸ் ராஜேஷ், கிருஷ்ண மூர்த்தி மற்றும் கே ஆர் புரம் லயன்ஸ் சங்கத்தின் கார்த்திகேயன், ரவி கண்ணன் லயன்ஸ் நண்பர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

கிள்ளியூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் அண்ணா பிறந்த தினம்



மார்த்தாண்டம், செப்.16

கிள்ளியூர் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா 118 வது பிறந்தநாள் கொண்டாட்டது. கருங்கல் அருகே பாலூர் ரவுண்டானா அருகில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஒன்றிய திமுக செயலாளர் பா கோபால் தலைமை வகித்தார். துணைச் செயலாளர் துரைராஜ், அவைத்தலைவர் பாலூர் தேவா, பொருளாளர் தங்கதுரை, வழக்கறிஞர் ஜெப ஜான் மற்றும் பஜான்சிங், ஜெனேபற்ட், ராபின்சன், லாசர், வேலாயுதம், ஜெனோ, அருளானந்தம், வலம்புரி ஜான், சேகர், அனீஸ், ஷோபா, எப்சி ராணி உட்பட பலர் கலந்து கொண்டனடு அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து ஐம் பெரும் முழக்கங்களை முழங்கி இனிப்பு வழங்கப்பட்டது.

தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் கட்டுமானப் பணிகளை கலெக்டர் ஆய்வு



தஞ்சாவூர், செப்.16: தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக வளாகத்தில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளை மாவட்ட கலெக்டர் ரேவதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ரூ.56.41 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ள இந்த அருங்காட்சியகத்துக்கான தளம், தமிழ் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ளது. தென் மண்டல கலாச்சார மையம், அரண்மனை வளாகம் மற்றும் யுனெஸ்கோ உலக பாரம்பரியச் சின்னமான பிரகதீஸ்வரர் கோயில் ஆகியவை அருங்காட்சியகத்துக்கு அருகில் அமைந்துள்ளன. அருங்காட்சியகத்தின் தரைத்தளத்தில் சோழ வம்சத்தின் தோற்றம் மற்றும் வரலாறு, சங்ககால சோழர்கள், நிர்வாகம் மற்றும் ஆட்சி முறை தொடர்பான காட்சியகங்கள் அமைக்கப்பட உள்ளன. முதல் தளத்தில் சோழர்களின் கட்டிடக்கலை, நகரத் திட்டமிடல், நீர் மற்றும் நில மேலாண்மை, கலை, பண்பாடு, சமூகம், பொருளாதாரம், இலக்கியம், வெளிநாட்டு வர்த்தகம், கடல் கடந்த வெற்றிகள், கடற்படை மற்றும் இராணுவ வலிமை உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. இதுகுறித்து கலெக்டர் ரேவதி கூறுகையில், சோழர்களின் வரலாறு, கலை, பண்பாடு மற்றும் நிர்வாகச் சாதனைகளை ஒருங்கிணைத்து வெளிப்படுத்தும் முக்கிய பண்பாட்டு மையமாக இந்த அருங்காட்சியகம் அமையும் என்றார்.

மேலும், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் உருவாக்கப்படும் இத்திட்டம் கல்வி, ஆய்வு மற்றும் சுற்றுலா வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதுடன், சோழ மரபின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் சிறப்பு மையமாக அமையும் என தெரிவித்தார்.

தொரப்பாடியில் 11 பிரண்ட்ஸ் குழுவின் சார்பாக 19 ஆம் ஆண்டு வெற்றி விநாயகர் சதுர்த்தி விழா



வேலூர், செப் 16 வேலூர் தொரப்பாடி பிள்ளையார் கோவில் தெருவில் பெரிய தெரு 11 பிரண்ட்ஸ் குழுவின் சார்பாக 19 ஆம் ஆண்டு வெற்றிவிநாயகர்சதுர்த்தி விழா நடைபெற்றது. விநாயகருக்கு சிறப்பு பூஜை செய்து அன்னதானம் நடைபெற்று மாலையில் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். இதில் சிறப்பு விருந்தினர்களாக வேலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.வினோத் கண்ணன், பாட்டாளி மக்கள் கட்சி வேலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் பஜெகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழா ஏற்பாடுகளை ஊர் தர்மகர்த்தா டி.வி.சிவராமன் வேலூர் மாநகராட்சி 49வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.லோகநாதன், பைனான்சியர் டி.எஸ்.செல்வகுமார் ஆகியோர் செய்திருந்தனர்

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

தருமபுரி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பல்வேறு நல திட்ட உதவிகள் பெற்று பயனடைந்துள்ளனர்

ஆட்சியர் சரவணன் தகவல்

தருமபுரி செப். 16 தருமபுரி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 10 /5 /2026 முதல் தற்போது வரை ரூ. 75.32 லட்சம் மதிப்பீட்டில் 384 மாற்றுத்திறனாளி பயனாளிகள் பல்வேறு நலத்திட்ட உதவிகள் பெற்று பயனடைந்துள்ளனர். மாவட்ட ஆட்சியர் சரவணன் நிறைந்த மனம் நிகழ்வில் தகவல். இது குறித்துதருமபுரிமாவட்ட ஆட்சியர் சரவணன் தெரிவித்துள்ளதாவது. தருமபுரி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இயற்கை மரணம்/ விபத்து மரணம் மற்றும் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டுருக்கான ஆல்பா படுகைக்கான உதவித்தொகை என 181 மாற்றுத் திறனாளி பயனாளிகளுக்கு ரூ.47.58 லட்சம் மதிப் பீட்டில் நல திட்ட உதவிகளும், மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 172 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ. 11.36 லட்சம் மதிப்பீட்டில் கல்வி உதவித்தொகையும், மாற்றுத்திறனாளிகளுக்கான சுய வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் 9 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.2.15 லட்சம் மதிப்பீட்டில் வங்கி கடன் மானியமும், மாற்றுத்திறனாளிகளுக்கு ஆவின் நிறுவனத்தின் உற்பத்தி பொருட்கள் விற்பனை மையம் அமைக்க முன்வைப்பு நிதிவழங்கும்திட்டத்தின் கீழ் 1 மாற்றுத்திறனாளி பயனாளிக்கு ரூ.50,000 தொகை மற்றும் முதல்வர் மைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 21 மாற்றுத் திறனாளி பயனாளிகளுக்கு ரூ.13.73 லட்சம் மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கு சேர்க்கை அவயங்கள் என மொத்தம் 384 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.75.32 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. என மாவட்ட ஆட்சியர் சரவணன் நிறைந்தது மனம் நிகழ்வின் மூலம் தெரிவித்துள்ளார்கள்.

அரசு பள்ளி மாணவியர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி முகாம்

கலெக்டர் துவக்கி வைத்தார்



நாகர்கோவில், செப்.16 கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளி கல்வித்துறையின் சார்பில் மாவட்டத்திற்குட்பட்ட அரசு பள்ளிகளில் 12ம் வகுப்பு முடித்து, உயர் கல்வி பயில உள்ள மாணவிகளுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல் முகாம் நாகர்கோவில் டதி மேல்நிலைப்பள்ளியில் நேற்று நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், கலந்துகொண்டு மாணவியர்களுக்கு பாராட்சி சான்றிதழ்கள் வழங்கி பேசியதாவது: கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்குழந்தைகள் அதிக அளவில் கல்வி கற்று வருகிறார்கள். ஆனால் கல்வி பயின்று முடித்த பின்பு பெண் குழந்தைகள் வெளியூர்களில்வேலைக்கு செல்லும் வாய்ப்புகள் குறைவாக உள்ளது. அந்த எண்ணிக்கையை நாம் உயர்த்த வேண்டும். பெண் குழந்தைகளை இன்னும் அதிகமா படிக்க வைத்தால், இந்தியாவோட பொருளாதாரம் சராசரியாக ஒரு ஆண்டுக்கு 1% இன்னும் அதிகமாக வளரும் என்பது உலக வங்கியின் கணக்கீடு. பெண்கள் சமுதாயத்தில் முன்னேறுவதோடு மட்டுமல்லாமல் அந்த சமுதாயத்தையும் முன்னேற்ற வேண்டும். ஒரு சமுதாயத்தை முன்னேற்ற பெண் குழந்தைகள் அவர்களின் பங்களிப்பை கொடுக்க வேண்டும். குமரி மாவட்டத்தில் பெண்கள் அதிக கல்வி கற்றாலும் தொழில் கல்வி சார்ந்த கல்வி கற்பது குறைவாக உள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள 100 மாணவிகளை நாம் இன்று தேர்ந்தெடுத்து இந்த கருத்தரங்கத்தை தொடங்கி உள்ளோம். என கூறினார். நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், மாவட்ட சமூக நல அலுவலர் காயத்ரி, ஆசிரியர்கள், துறை அலுவலர்கள், மாண வியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

குமரி மாவட்ட எல்லை சோதனைச் சாவடிகளில் கலெக்டர் இரவில் ஆய்வு



நாகர்கோவில், செப்.16: கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றிய ஸ்டாலின் திடீரென பணியிட மாற்றம் செய்யப்பட்டு காத்திருப் போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், குமரியில் இருந்து கேரளாவுக்கு கனிமவளங்கள் கடத்தப்படுவதாக புகார்கள் எழுந்துள்ளன. அவரது இடமாற்றத்துக்கு கனிமவள கடத்தல் கும்பலே காரணம் என பொதுமக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளதுடன், இயற்கை ஆர்வலர்கள், சமூக அமைப்புகளும் கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். மேலும், ஸ்டாலின் இடமாற்றம் செய்யப்பட்ட சில மணி நேரங்களிலேயே தமிழக–கேரள எல்லை சோதனைச்சாவடிகள் வழியாக கனிமவள லாரிகள் வேகமாக சென்றதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டன. இதையடுத்து, பொதுமக்களின் சந்தேகங்களைப் போக்கும் வகையிலும், சட்டவிரோத கனிமவள கடத்தலை தடுக்கும் வகையிலும் கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் பிரதாப், நேற்று முன்தினம் நள்ளிரவில் தமிழக–கேரள எல்லைப் பகுதிகளில் உள்ள பல்வேறு சோதனைச்சாவடிகளில் நேரடியாக சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது பாதுகாப்புப் பணியில் இருந்த அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவுகளை பிறப்பித்த அவர், எந்த காரணத்தாலும் வாகனங்களை முழுமையாக சோதனை செய்த பின்னரே எல்லையை கடக்க அனுமதிக்க வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், முறைகேடுகளைத் தடுக்க வருவாய்த்துறை, காவல்துறை, கனிமவளத்துறை ஆகிய 3 துறைகளும் ஒருங்கிணைந்து 24 மணி நேரமும் சுழற்சி முறையில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் என உத்தரவிட்டார். சட்டவிரோத கனிமவள கடத்தல் குறித்து தகவல் தெரிந்தால் மாவட்ட நிர்வாகத்துக்கு உடனடியாக தெரிவிக்கலாம் என்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தினார். கனிமவள கடத்தல் தடுப்பு நடவடிக்கை தொடர்ந்து நீடிப்பதுடன், கடத்தல் கும்பல்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குடிநீர் தட்டுப்பாடு




திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் மற்றும் அவர்களது உறவினர்களுக்கு போதிய குடிநீர் கிடைக்காமல் அவதிப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள RO குடிநீர் இயந்திரம் செயல்படாததால், குடிநீருக்காக நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் மருத்துவமனைக்கு வெளியே உள்ள தனியார் கடைகளை நாட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையை நாடி வரும் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குடிநீருக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

RO இயந்திரத்தை உடனடியாக சீரமைத்து, மருத்துவமனைக்கு வரும் அனைவருக்கும் தடையின்றி பாதுகாப்பான குடிநீர் கிடைக்க மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா? என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது. – குடிநீர் வசதி சீராகுமா? நோயாளிகளின் அவதி தீருமா? பொது மக்களின் எதிர்பார்ப்பு....

ஈரோடு மொக்கையன் பாளையத்தில், எஜமானின் உயிரை காப்பாற்ற தனது உயிரை இழந்த வளர்ப்பு நாய்..!



ஈரோடு செப்டம்பர் 16 ஈரோடு மாவட்டம், வில்லரசம்பட்டி அருகே உள்ள மொக்கையன் பாளையத்தில் சண்முகம் என்பவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார், இவர் ஒரு கூலித் தொழிலாளி ஆவார்,

இவரது வீட்டில் நாய் ஒன்றையும் வளர்த்து வருகிறார்

இந்நிலையில், சண்முகம் வேலைக்கு சென்று இருந்த நிலையில், இவரது வீட்டிற்குள் நாக பாம்பு ஒன்று நுழைந்துள்ளது, இந்த பாம்பை பார்த்த இந்த வளர்ப்பு நாய், தனது உரிமையாளரை பாதுகாக்க வீட்டில் தொடர்ந்து குரைத்தவாறு பாம்பை விரட்ட முயன்றது,

நாய் தொடர்ந்து குறைத்துக் கொண்டிருந்ததால் அக்கம்பக்கத்தினர் வந்து பார்த்துள்ளனர், அப்போது பாம்புடன், நாயும் போராடிக் கொண்டிருப்பதை பார்த்துள்ளனர்,

இந்நிலையில், ஐந்தரை அடி நீளம் உள்ள நாகப் பாம்பு பாம்பு, நாயை கொத்தி விட்டு வீட்டிற்குள் இருந்த சிலாபுக்கு அடியில் சென்று பதுங்கிக் கொண்டது,

இதனை அடுத்து பாம்பு பிடிக்கும் இளைஞர் யுவராஜாவை அழைத்ததின் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த யுவராஜா பாம்பு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, அந்த ஐந்தரை அடி நீளம் உள்ள நாகபாம்பை லாவகமாக பிடித்தார்,

இதனை அடுத்து அந்தப் பாம்பு ஈரோடு வனத்துறையினரிடம் கொண்டு சென்று யுவராஜா ஒப்படைத்துள்ளார்,

வேலூர் தொரப்பாடி ஜீவா நகரில் 19ம் ஆண்டு சக்தி விநாயகர் வைத்து வழிபாடு செய்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது



வேலூர் செப்.16 விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு வேலூர் மாவட்டம் தொரப்பாடி பகுதியில் உள்ள ஜீவா நகர் நவாடியம்மன் கோவில் பின்பு றம்தெருவில்19ம்ஆண்டு சக்தி விநாயகர் வைத்து கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

விழாவில் விநாயகர் முன்பு பொறி, கொய்யாக்கா, மாம்பழம், திராட்சை, அண்ணாச்சி, பழங்கள் வைத்து படையலிட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதனை தொடர்ந்து இந்த பகுதியைச் சேர்ந்த சீனிவாசன் குடும்பத்தினர் சார்பில் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு அன்னதானத்தை பெற்றுச் சென்றனர்.

குமரியில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்; கலெக்டர் அறிவிப்பு

நாகர்கோவில், செப்.16 கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 30.10.2026 காலை 10.30 மணிக்கு சென்னை ஓய்வூதிய இயக்குநர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நாகர்கோவில் ஆட்சியர் அலுவலக 3வது தளத்தில் அமைந்துள்ள வருவாய் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசு துறைகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியம் தொடர்பாக தீர்வு செய்யப்படாமல் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள குறைகளை பரிசீலனை செய்வதுடன் அவர்கள் கோரிக்கை மனுக்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு செய்திட தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்படும். குமரி மாவட்டத்தில் மாநில அரசு துறை அலுவலகங்கள், அரசு நிதி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதிய பலன்கள் தீர்வு செய்யப்படாமல் இருந்தால் அவ்விபரங்களை இரட்டை பிரதிகளில் 25.09.2026 பிற்பகல் 5.00 மணிக்குள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். 25.09.2026க்கு பின்னர் வரும் கோரிக்கை மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. ஓய்வூதியதாரர் தங்கள் மனுவில் ஓய்வூதிய/குடும்ப ஓய்வூதிய புத்தக எண். ஓய்வு பெற்ற நாள், கடைசியாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற அலுவலகத்தின் பெயர், கோரிக்கை நிலுவையில் உள்ள அலுவலகம், ஓய்வூதியம் பெற்றுவரும் கருவூலம் ஆகிய விபரங்களுடன் கோரிக்கையைத் தெரிவிக்குமாறு ஓய்வூதியதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதில் வெளி மாவட்டங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்று அங்கு ஓய்வூதியம் பெறுவோரின் கோரிக்கை மனுக்கள், மாநில அரசு சார்பற்ற துறைகளில் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், மின்சாரவாரியம், போன்ற கழகம் மற்றும் வாரியங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களின் கோரிக்கை மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. இந்த தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தெரிவித்துள்ளார்.

காப்புக்காட்டில் குமரி முத்தமிழ் மன்ற கூட்டம்

புதுக்கடை, செப்.16 குமரி முத்தமிழ் மன்ற கூட்டம் டாக்டர் பத்மநாபன் தலைமையில் காப்புக்காட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடந்தது. சிலம்பை டென்னிசன் வரவேற்றார். குமரி முத்தமிழ் மன்ற நிறுவனத் தலைவர் லாசர் செயல்பாட்டுரை வழங்கினார். கவிஞர்கள் பெனிட்டா, ஞானாமிர்தம், பாலூர் தேவா, பூமணி ஆகியோர் கவிதை படித்தனர். பங்கு அருட்பணியாளர் ஓய்சிலின் சேவியர் அடிகளார், சிலுவைமுத்து, கருங்கல் ஜார்ஜ், ஜஸ்டிஸ் அமிர்தயன் , வின்சென்ட் சைஜீ குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். ஓலக்கோடு ஜான் தமிழ் இலக்கியம் குறித்து சிறப்புரையாற்றினார். பணி நிறைவு பெற்ற முதுநிலை தமிழாசிரியர் பாபு நன்றி கூறினார்.



சேலம் மாவட்டத்தில் 187 தற்காலிக செவிலியர் பணியிடங்கள் தகுதியானவர்கள் செப்.26க்குள் விண்ணப்பிக்கலாம்

சேலம், செப்.16:

சேலம் மாவட்டத்தில் காலியாக உள்ள 187 தற்காலிக செவிலியர் பணியிடங்களை முற்றிலும் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தேசிய நலக்குழுமத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவமனைகளில் இந்த பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இதற்கு பி.எஸ்.சி. நர்சிங் பட்டம் பெற்றவர்களும், இந்திய நர்சிங் கவுன்சிலில் பதிவு செய்யப்பட்ட தகுதியான நர்சிங் கல்லூரியில் பயின்றவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்களின் வயது 50க்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். தகுதியானவர்கள் சேலம் மாவட்ட நிர்வாகத்தின் https://www.salem.nic.in இணையதளத்தில் விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்ய வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட சுகாதார அலுவலர்/நிர்வாக செயலாளர், சேலம் மாவட்ட நலச்சங்கம், பழைய நாட்டாண்மை கழக கட்டிட வளாகம், சேலம்–636001 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பலாம். விண்ணப்பங்கள் வரும் 26.9.2026 அன்று மாலை 5 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். இந்த வாய்ப்பை தகுதியானவர்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு சேலம் மாவட்ட கலெக்டர் இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டிகள் துவக்க விழா

கலெக்டர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்



தஞ்சாவூர் செப்.16

தஞ்சாவூர் மாவட்ட அன்னை சத்யா விளையாட் டு அரங்கில் இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுதுறை சார்பில் மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட கலெக்டர் ரேவதி தலைமையில் ,தொடங்கி வைத்தார்

தமிழ்நாட்டை விளையாட்டின் முதன்மையான மாநிலமாக உருவாக்குவதுடன் தனி நபர்களுக் கு விளையாட்டுகளை முழு திறனுடன் அணுக வும் அவர்கள் உயர்மட்ட போட்டிகளில் பங்கு பெற்று சிறப்படையவும் வாய்ப்புகளை தமிழ்நாடு அரசு வழங்குவதுடன் விளையாட்டு மற்றும் இளைஞர் நலனில் மேம் பாட்டில் மிகுந்த அர்ப்ப ணிப்புடன் செயல்பட்டு, பல்வேறு திட்டங்கள் மூலம் தொடர்ந்து நிதி உத விகளை விளையாட்டு வீரர்களுக்கு வழங்கி வரு கி ற து

மேலும் மாவட்ட அள வில் தற்போது நடை பெறும் முதலமைச்சர் கோப்பைவிளையாட்டுப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தலா முதல் பரிசாக ரூபாய் 3,000 ,இரண்டாவது பரிசா க ரூபாய் 2,000 ,மூன்றாவது பரிசாக ரூபாய்1,000 ஆயிரம் வழங்கப்படும் .மாநில அளவில் தனி நபர் போட் டிகளில் வெற்றி பெறுப வர்களுக்கு முதல் பரிசாக ரூபாய் 1 லட்சம், இரண் டாவது பரிசாக ரூபாய் 75,000 ,மூன்றாவது பரி சாக ரூபாய் 50,000 வழங் கப்படும். குழு போட்டி யில் பங்கு பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா 75 ஆயிரம் ,இரண்டாவது பரிசாக 50,000, மூன்றாம் பரி சாக25 ஆயிரம் பரிசாக வழங்கப்பட உள்ளது. போட்டிகளில் வழங்கப் படும் சான்றுகள் மூலம் உயர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சலு கைகளும் பெற இயலும்

மாற்றுத்திறனாளிகள் பிரிவினர் கை, கால் ஊன முற்றோருக்கு தடகளம், சக்கர நாற்காலி, மேஜைப் பந்து மற்றும் இறகுப் பந்து விளையாட் டுப் போட்டிகளும் ,பார்வை திறன் குறையுடை யோருக்கு தடகளம், அடாப்டர், வாலிபால் விளையாட்டு போட்டிக ளும் மனநலம் பாதிக்க ப்பட்டவருக்கு தடகளம், எறிபந்து விளையாட்டு போட்டிகளும் மற்றும் காது கேளாதோருக்கு தட களம் மற்றும் கபடி ஆகிய விளையாட்டுப் போட்டி கள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) அன்னை சத்யா விளையாட்டு அரங் கத்தில் நடைபெற்று வரு கிறது என மாவட்ட கலெக்டர் ரேவதி தெரி வி த் து ள் ள ா ர்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு அலுவலர் செந்தில்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 697 விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன



தஞ்சாவூர் செப். 16

தஞ்சாவூர் மாவட்டத்தில் 697 விநாய கர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப் பட்டன. இதில் 64 சிலைகள் ஊர்வ லமாக எடுத்துச் செல்லப்பட்டு கரைக்கப் பட்டன.

விநாயகர் சதுர்த்தி விழாவை யொட்டி தஞ்சை மாவட்டம் முழுவதும் இந்து அமைப் புகள், சமூக அமைப்புகள் சார்பில் பல்வேறு இடங்க ளில் விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட் டன. தஞ்சாவூர் பழைய பஸ் நிலையம் எதிரே வி ஸ் வ ரூ ப வி ந ா ய க ர் சதுர்த் தி விழா குழு சார் பில் 10 அடி உயர பிரம் மாண்டமான விநாயகர் சிலை யை பிரதிஷ்டை செய்யப்பட்டு சிறப்பு வழிபாடு நடந்தது

இதற்கு பா.ஜனதா மாவட்ட பொருளாளர் விநாயகம் தலைமை தாங் கினார். தெற்கு மாவட்ட தலை வர் ஜெய சதீஷ் மற் றும் நிர்வாகி கள் முன் னிலை வகித்தனர். ஏராள மானோர் கலந்து கொண் டனர். பின்னர் அனைவ ருக்கும் பொங்க ல், சுண் டல் பிரசாதம் வழங்கப்பட்ட து. இதே போல மாநகரில் மட்டும் வடக்கு வீதி, சிவகங்கை பூங்கா ,மேல வீதி, சிங்கப் பெருமாள் குளக் கரை உள்பட 85 இடங்களில் வண் ண வண்ண விநாய கர் சிலை பிரதிஷ்டை செ ய் ய ப் ப ட் ட ன . விஷ்ணு வடிவில் விநாய கர், சக்தியுடன் விநாயகர், யானை மீது விநாயகர், புலிகள் ,மயில் ,கருடன், மூஞ்சுறு மீது விநாயகர் பல்வேறு வடிவிலா ன விநாயகர் சிலைகள் பிர திஷ்டை செய்யப் பட்டன.

அதைத்தொடர்ந்து விநாயகர் சிறப்பு பூஜைக ளும் செய்யப்பட்டன 3 அடி முதல் 10 அடி உயரம் வரை யிலான விநாயகர் சிலைகள் பெருசு செய் யப்பட்டன. இதைப் போல மாவட்ட முழுவ தும் 697 விநாயகர் சிலை கள் பிரதிஷ்டை செய்யப் பட்டன. பொதுமக்கள் வீடுகளில் ஒரு அடி உயர விநாயகர் சிலைகளை வைத்து பூக்கள், பொறி, கடலை, அவல், பழ வகைக ள் விளம்பழம் போன்றவற்றை வைத்து படைத்து வழிபாடு செய் த ன ர்

தஞ்சாவூர் மாநகரில் 16 புதன் கிழமை மாலை 3 மணிக்கு விநாயகர் சிலை கள் ஊர்வலம் நடைபெறு கிறது. இதில் மாநகரில் பிரதிஷ்டை செய்யப் பட்ட விநாயகர் சிலைகள் வாகனங்களில் ஊர்வல மாக ரயில் நிலைய பகு திக்கு எடுத்துவரப்பட்டு பின்னர் அங்கிரு ந்து ஊர் வலமாக முக்கிய வீதிகள் வழியாக கரந்தை வடவா றுக்கு எடுத்துச் செல்லப் பட்டு கரைக்கப் படுகின் றன.

வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம் வழங்க கோரிக்கை

ஜெய்னூரில் தமிழக விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்



கிருஷ்ணகிரி, செப்.16: க ா வ ே ரி ப் ப ட் டி ன ம் அருகே ஜெய்னூர் கிராமத் தில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் அவசர ஆலோ சனைக் கூட்டம் நடை பெற்றது. மாநில துணைத் தலைவர் முருகன் முன்னிலையில் நடை பெற்ற கூட்டத்தில், மாநில தலைவர் வேணு கோபால் சிறப்பு அழைப் பாளராக பங்கேற்றார்.

கூட்டத்தில் தமிழக அரசு அறிவித்துள்ள விவ சாயிகள் கடன் தள்ளுபடி நடவடிக்கையை வரவேற் பதுடன், அனைத்து விவ சாயிகளுக்கும் முழுமை யாக கடன் தள்ளுபடி வழங்க வேண்டும் என தீ ர் ம ா ன ம் நிறைவேற்றப்பட்டது.

தமிழகம் முழுவதும் வறட்சி அதிகரித்து வருவ தால் பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண் டும். கிருஷ்ணகிரி உள் ளிட்ட மாவட்டங்களில் உள்ள பத்திரப்பதிவு அலு வலகங்களில் நடைபெ றும் முறைகேடுகளை அரசு தீவிரமாக கண்கா ணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று ஆவின் மூலம் கொள்மு தல் செய்யப்படும் பாலுக் கான விலையை உயர்த் திய தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட தலைவர் ராஜ், மாநில செயலாளர்கள் கோணப் பன், சுபாஷ், பொருளா ளர் உதயகுமார், மாவட்ட செயலாளர் சிவகுமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வா கிகள் மற்றும் மகளிரணி, இளைஞரணி பொறுப்பா ளர்கள் கலந்து கொண்ட னர்.

வேலூர், அரசமரப்பேட்டை, சுண்ணாம்புக்கார தெருவில் 24வது ஆண்டு ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி திருவிழா



வேலூர் செப் 14

திங்களன்று ஸ்ரீவிநாயகர் பிரதஷ்டை சிறப்பு பூஜையும், கணபதி ஹோமம், தீப ஆரா த ன ை யு ம் நடைபெற்றது. அதே சமயம் அன்னதானம் வழங்கப்பட் டது. சாலை மாரியம்மன் கோவில் விழாகுழு = கே.கரு ண ா க ரன் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

ஸ்ரீ வல்லபை ஐயப்பன் கோயிலில் 2ம் பிரதிஷ்டை விழா



ராமநாதபுரம், செப்.16

ராமநாதபுரம் மாவட்டம் ெ ர கு ந ா த பு ர ம் ஸ்ரீ வல்லபை அய்யப் பன் கோயிலில் 2ஆம் பிர திஷ்டை விழா சரண கோஷத்துடன் சிறப்பு அபிஷேக ஆராதனையு டன் நடைபெற்றது. ெ ர கு ந ா த பு ர ம் ஸ்ரீவல்லபை அய்யப்பன் கோயிலில் கடந்த 2017 செப் 15ல் சபரிமலை தந் திரி ஸ்ரீ கண்டருராஜுவரு தலைமை குருக்கள்தலை மையில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து இ ர ண் ட ா ம் பிரதிஷ்டை விழாவில் நேற்று அதிகாலை கண பதி ஹோமம் நடந்தது. பின்னர்காலை 8மணிக்கு அ ய் ய ப் ப னு க் கு பஞ்சகவ்யம், பஞ்சாமிர் தம், நெய், விபூதி, தேன், பால், இளநீர், தயிர், சந்த னம், பன்னீர் உள்பட 19 வகை திரவியங்களால் ஐயப்பனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப் பட்டது.

அதனை தொடர்ந்து காலை 9 மணிக்கு அய் யப்பனுக்குசிறப்பு அலங் காரம், ஆராதனை நடை பெற்றது. ராமநாதபுரம், ெரகுநாதபுரம், வாலாந்த ரவை, வழுதூர் உள் ளிட்ட பல்வேறு ஊர்க ளில் இருந்து நூற்றுக்கணக்கான அய் யப்ப பக்தர்கள் குடும்பத் துடன் கலந்து கொண்டு அய்யப்பனை தரிசித்து அருள் பெற்று சென்ற னர். விழா ஏற்பாடுகளை தலைமை குருசாமி மோகன் சாமி தலைமை யில் ஸ்ரீ வல்லபை அறக் கட்டளை நிர்வாகிகள் செய்து இருந்தனர். விழாவில் பங்கேற்ற பக் த ர் க ளு க் கு அன்னதானம் வழங்கப் ப ட் ட து . ஸ்ரீவல்லபை அய்யப்பன் கோயில் பக்தர்களின் பக்தி கச்சேரி நடைபெற் றது.

பெரம்பலூர் பச்சைமலைத் தொடரில் திடீர் மழை



பெரம்பலூர்: பெரம்ப லூரில் பச்சைமலைத் தொடரில் கனமழை பெய் துவருவதால், அடைக்கப் பட்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனி டையே, மழை வெள்ளம் காரணமாக ஓடையில் அடித்துச் செல்லப்பட்ட வர்கள் பத்திரமாக மீட்கப் பட்டார்.

பெரம்பலூர் மாவட் டம் அடைக்கப்பட்டி கிரா மத்தை ஒட்டி பச்சை மலை தொடர் உள்ளது. மழை நேரங்களில் இந்த பச்சைமலையின் வழி யாக மங்கலம் அருவி, விஸ்வகுடி நீர்த்தேக்கம் மற்றும் அடைக்கம்பட்டி சின்ன ஏரி மற்றும் பெரிய ஏரிக்கு நீர் வழிந்தோடும். இந்த நிலையில் கடந்த சில நாட்களாக பச்சைம லைத் தொடர் பகுதியில் கனமழை பெய்து வருகி றது.

இதன் காரணமாக மங் கலம் அருவி, விஸ்வகுடி நீர்த்தேக்கத்திற்கு தண் ணீர் வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. அதேபோல ஆலத்தூர் வட்டம் அடைக்கப்பட்டி சின்ன ஏரி மற்றும் பெரிய ஏரிக்கும் நீர்வரத்து அதிக ரித்துள்ளது. குறிப்பாக மழை நேரங்களில் நீர்வ ரத்து அதிகரித்து காணப் பட்டது. நேற்று பச்சைம லைத் தொடர் பகுதிகளில் கனமழை பெய்தது. இத னால் அடைக்கப்பட்டி சின்ன ஏரி, பெரிய ஏரிக்கு நீர்வரத்து வழக்கத்திற்கு மாறாக அதிகரித்து காணப் பட்டது.

இதனால் விவசாய நிலங்களுக்கு வெள்ள நீர் புகுந்தது. மேலும் அடைக் கப்பட்டி ஏரிகளுக்கு வந்த ஓடைகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. நேற்று மாலை கனமழை யின் போது, அடைக்கப் பட்டி ஏரிகளையொட்டி விவசாயிகள் தங்கள் விளைநிலத்தில் ஓடை வழியாக மறுபக்க கரைக்கு செல்ல முயன் றுள்ளனர். அப்போது ஏரிக்கு நீர்வரத்து அதிகரித் ததால், ஓடைகளைகடக்க முயன்றவர்கள் வெள்ளத் தில் அடித்துச் செல்லப் பட்டனர். அதில் ஒருவர் இருச்சக்கர வாகனத்து டன் இழுத்து செல்லப் பட்டதால் பரபரப்பு ஏற் பட்டது.

இதனைக் கண்ட அப்ப குதி மக்கள் கயிறு மூலம் ஓடையில் இழுத்துச் சென்றவர்களை மீட்டு கரை சேர்த்தனர். மேலும் நீரில் அடித்துச் செல்லப் பட்ட இருச்சக்கர வாக னத்தையும் மீட்டனர். திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக ஏரிக் கரைகள் மற்றும் ஓடைகளின் அருகே பொதுமக்கள் செல்லத் தடை வி தி க் க ப் ப ட் டு ள் ள து . தொடர்ந்து பச்சைமலை தொடர் பகுதிகளில் கன மழை பெய்ய வாய்ப்பு இருப்பதால், பொதுமக் கள் எச்சரிக்கையாக இருக்க மாவட்ட நிர்வா கம் அறிவுறுத்தியுள்ளது.

ஜி.கே.என்.எம். மருத்துவமனை சார்பில் ரன் ஃபார் லிட்டில் ஹார்ட்ஸ்' விழிப்புணர்வு மாரத்தான் செப் 27 இல் நடக்கிறது



கோவை செப்:16

கோவை,ஜி. குப்புசாமி நாயுடு நினைவு (GKNM) மருத்துவமனை,இருதய குறைபாடுகள் மற்றும் குழந்தை பருவ புற்றுநோ யால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவும் நோக்கில்,ரன் ஃபார் லிட் டில் ஹார்ட்ஸ் என்ற விழிப்புணர்வுஓட்டத்தை செப்டம்பர் 27 அன்று நடத்த ஏற்பாடு செய்துள் ளது. செப்டம்பர் மாதம் குழந்தை பருவ புற்று நோய் விழிப்புணர்வு மாத மாகவும், செப்டம்பர் 29 ஆம் தேதி உலக இருதய தினமாகவும் இருப்ப தால், இந்த மேரத்தான் செப்டம்பர் 27 கோவை பாப்பநாயக்கன்பாளை யத்தில் உள்ள மணி மேல் நிலைப் பள்ளியில் நடை ெப ற திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் மூன்று வெவ் வேறு பிரிவுகள் உள் ளன, குழந்தைகள், குடும் பங்கள் மற்றும் மூத்த குடிமக்கள் என அனைத்து வயதினரும் இணைந்து ஓடக்கூடிய மாரத்தானில் 5 மற்றும் 10 கி.மீ பிரிவுக ளில் வெற்றி பெறுபவர்க ளுக்கு ரூ.80,000 மதிப்பி லான ரொக்கப் பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த மேரத்தான் கோவை மாவட்ட தடகள சங்கத் தால் (Coimbatore District Athletic Association) அங்கீகரிக் கப்பட்டு ஒப்புதல் அ ளி க் க ப் ப ட் டு ள் ள து . இந்த நிகழ்விற்கு LMW,லட்சுமி கார்ட் கு ே ள ா தி ங் , ப் ளூ ட ா லி ய ா , பி ரீ மி ய ர் ஃ ை பன் லினன்ஸ்,லட்சுமி மில்ஸ் நி று வ ன ம் , ல ட் சு மி எனர்ஜி &என்விரான் மென்ட் டிசைன்ஸ் பிரை வேட் லிமிடெட் (LEED),பிரிகாட் மற்றும் உபசரிப்பு பங்காளராக சோடெக்ஸோ ஆகி யவை ஆதரவளிக் கின்றன.

மாரத்தான் டிஷர்ட் மற் றும் பதக்கம் அறிமுகப்ப டுத்தும் நிகழ்வு கோவை GKNM மருத்துவமனை வளாகத்தில் நடைபெற் றது.இந்த நிகழ்வின் போது,GKNMH முதன்மை நிர்வாக அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுசாமி பேசு கையில்,2025 முந்தைய பதிப்பில் 3000 உறுப்பி னர்கள்தீவிரமாக பங்கேற் றனர் என்றும்,இதன் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து இருதய குறைபாடுகள்மற்றும்புற் றுநோயால் பாதிக்கப் பட்ட 42 குழந்தைகள்பய னடைந்தனர் என்றும் கூறினார். கடந்த மூன்று ப தி ப் பு க ளை ப் போலவே,எங்கள் மருத் துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்த குழந்தைகளும் இந்த ஓட் டத்தில் பங்கேற்கின்ற னர்.KNC அறக்கட்டளை யின்ஒருஅங்கமானGKNM மருத்துவமனை,கோவை நகரில் குழந்தை இருதய சிகிச்சைமற்றும்குழந்தை புற்றுநோயியல் துறை யில் முன்னோடியாக விளங்கி வருகிறது. எங் கள் குழந்தை இருதய மற் றும் புற்றுநோயியல் பிரிவு, நம் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மேம் பட்ட தொழில்நுட்பங்க ளுடன் கூடிய அதிநவீன வ ச தி க ளை முழுமையாகக் கொண் டுள்ளது என்றார்.இந்நி கழ்வில் GKNM மருத்துவ மனையின் தலைமை செயல் அதிகாரி ரகுபதி வேலுசாமி, நிர்வாகக் குழு உறுப்பினர் கள்,குழந்தை இருதயவி யல் ,இ ரு த ய அ று வை சிகிச்சைமற்றும்குழந்தை புற்றுநோயியல் துறை மருத்துவர்கள் மற்றும் LMW,நிறுவனபிரமுகர்கள் மற்றும்கோவைமாவட்ட தடகள சங்கத்தின் பிரமு கர்கள் கலந்து கொண்ட னர்.

கொரட்டி அரசு மேல்நிலைப் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் சார்பில் பரிசு மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி



திருப்பத்தூர்:செப்:16, திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியத்திற்குட் பட்ட கொரட்டியில் செயல்பட்டு வரும் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியர் தின விழா மற் றும் உபகரணங்கள் வழங் கும் நிகழ்ச்சி நடைபெற் ற து .

இந்நிகழ்ச்சியானது பள் ளியின் தலைமையாசிரி யர் மகேஷ்வரி தலைமை யில் நடைபெற்றது. மேலும், முன்னாள் மாண வர் நெப்போலியன், தண் டபாணி, சுப்பிரமணி ஆகியோருக்கு ஆசிரியர் கள்மற்றும்மாணவமாண விகளுக்கு பரிசு மற்றும் உபகரணங்கள் வழங் கினர். முன்னதாக பள்ளியின் சார்பில் 19961997 ஆம் ஆண்டின் முன்னாள் மாணவர்களுக்குசால்வை அணிவித்து மரியாதை செ ய் த னர் . நிகழ்ச்சியில் இருபால் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

"தேர்தலுக்கு பிறகு மாநில அந்தஸ்துக்காக டெல்லி சென்று பிரதமரை சந்திப்பேன்" புதுவை முதல்வர் ரங்கசாமி

புதுச்சேரி: "தட்டாஞ்சா வடி இடைத்தேர்தலுக்கு பிறகு மாநில அந்தஸ்துக் காக டெல்லி சென்று பிரத மரை சந்திப்பேன்," என்று மாநில முதல்வர் ரங்கசாமி அறிவித்துள்ளார்.

புதுச்சேரி தட்டாஞ்சா வடி இடைத்தேர்தல் வரும் அக்டோபர் 6ம் தேதி நடை பெறவுள்ளது. நாளையு டன் வேட்பு மனு தாக்கல் முடிவடைய உள்ள நிலை யில் அனைத்துக் கட்சிக ளும் வேட்பாளரை அறி விப்பதில் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்நிலை யில் புதுச்சேரி காமராஜர் சாலையில் அமைந்துள்ள – சிவகவி ஹோட்டலில் முதல்வர் ரங்கசாமி தலை மையில் தேசிய ஜனநாய கூட்டணி ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

இக்கூட்டத்தில் பாஜக மாநிலத் தலைவர் ராமலிங் கம், அதிமுக மாநிலச் செய லாளர் அன்பழகன், பாமக கட்சி நிர்வாகிகள் மற்றும் அமைச்சர்கள் கூட்டணி சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்றனர். இதனைத் தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட் டணி வேட்பாளராக என். ஆர்.காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அசோக் ஆனந்த் அறிவிக்கப்பட்டார். கூட் டத்தில் என்டிஏ தலைவ ரும் முதல்வருமான ரங்க சாமி பேசுகையில், "அதிக வாக்குகளை பெற்று வெல்ல அனைவரும் பாடு பட வேண்டும். நமது கரத் தையும் ஆட்சியையும் வலுப்படுத்த வேண்டும். என்டிஏ அரசு பல சாதனை களை செய்து வருகிறது.

புதுச்சேரி வளர்ச்சிக்கு பிரதமர் மோடி உறுதுணை யுடன் பல திட்டங்களை கொண்டு வருவோம். சிறந்த மாநிலமாக புதுச் சேரி திகழ்கிறது, இதனை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல இந்த வெற்றி வாய்ப்பு தேவை. எனவே அனைவரும் இணைந்து பாடுபட்டு அதிக வாக்கு வித்தியாசத்தில் வேட்பா ளரை வெற்றி பெறச்செய்ய வேண்டும்" என்றார்.



ராமநாதபுரம் மாவட்டம் திமுக மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் அறிவுரையின்படிமண்டபம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ஜே.பிரவீன் தலைமையில் ஒன்றிய நிர்வாகிகள் அண்ணாவின் 118 வது பிறந்தநாள் தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவ சிலைக்கு திமுக கே.ஜே.பிரவீன் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C,246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.